## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | |
|---|---|
| Case No. | **O.S.No.258/2020** |
| Deposition of witness for | **PW – 1** |
| Name | கலியபெருமாள் |
| Father/ Husband Name | சுப்பையா |
| Village | விளந்தை |
| Taluk | ஆண்டிமடம் |
| Calling | நகை செய்யும் தொழில் |
| Age | 88 |

2025–ம் ஆண்டு பிப்ரவரி 25–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஜெயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## 1 முதல் 3, 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கை எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால். சர்வே எண்.584/9, 584/10 என்ற இரு அயிட்டங்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் சர்வே எண் 584/9 இடிந்த வீடு என்றால் ஆமாம். சர்வே எண் 584/10 அதை சேர்ந்த தோட்டம் என்றால் ஆமாம். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தது எப்போது என்றால் 2019. வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி இருசொத்துகளுக்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால், யார் பெயரிலும் இல்லை. சர்வே எண்584/9, 584/10–ம் 3 ஆம் பிரதிவாதி பிராசாத்குமார் என்பவர் பெயரில் கிரையம்

ஏற்பட்டு அவர் பெயரிலும் அவரது மனைவி மல்லிகா பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.8–ஆனது வழக்கு நிலுவையில் இருக்கும்போது குமரேசன் என்பவர் பெயரில் 24.11.2023–ல் பட்டாமாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் 2019 ஆம் ஆண்டே பட்டாவானது மாறிவிட்டது. தாலுக்கா அலுவலகம் மூலம்தான் பட்டா மாறுபட்டது என்றால் சரிதான். பட்டா பெயர் மாற்றம் செய்யும்போது 3 ஆம் பிரதிவாதி பிராசாத்குமார் அவரது மனைவி ஆகியோர்களை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து 3 ஆம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவிக்கு தெரியாமல் தாவா சொத்திற்கு உண்டான பட்டாவினை தவறான முறையில் பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.8 சட்டப்படி ஏற்கக்கூடிய ஆவணம் இல்லையென்றாலும் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்துகளும் பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நாங்கள் தான் அங்கு தங்கி சமைத்து அனுபவித்து வருகிறோம். பொய்யான ஆதரங்களை கொண்டு தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ஒப்பம்/J. அனிதா கிறிஸ்டி,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.